2025 ஒத்தோபர்

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2025 ஒத்தோபரில் 64.3 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.** உயர்வான இந்த அளவீடு கடந்த மாதத்தின் உச்சநிலையைத் பின்பற்றிச்சென்று, கட்டுமான நடவடிக்கைகளுக்காக தொடர்ச்சியாக சாதகமான தோற்றப்பாடொன்றைக் குறித்துக்காட்டுகின்றது.

அரசாங்க நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களில் அதிகரிப்பொன்றை பல பதிலிறுப்பாளர்கள் தெரிவித்ததுடன் புதிய கட்டளைகள் சுட்டெண் ஒத்தோபரில் தொடர்ந்தும் அதிகரித்தது. கட்டுமான கருத்திட்டங்களின் நிலையான பாய்ச்சலால் ஆதரவளிக்கப்பட்டு, தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் அளவுச் சுட்டெண்களும் மாத காலப்பகுதியில் விரிவடைந்து, நிறுவனங்களின் தொடர்ச்சியான நம்பிக்கையைப் பிரதிபலித்தது. நிரம்பலர் விநியோக நேரம் இம்மாத காலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டது.

**கொ.மு. சுட்டெண் தொகுப்பு - கட்டடவாக்க அளவீடு**


| மாறி | செத் | ஒத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **67.6** | **64.3** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 68.9 | 67.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 55.4 | 52.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் அளவு | 56.8 | 58.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 52.7 | 52.9 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெரும்பாலான நிறுவனங்கள் கருத்திட்டங்களில் தொடர்ச்சியான முன்னேற்றத்தனை எதிர்பார்ப்பதன் மூலம் அடுத்த மூன்று மாதங்களுக்கான எதிர்பார்ப்புகள் சாதகமாகக் காணப்படுகின்றன.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 ஒத்தோபர்**
**64.3**

கொமுசு - கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு கட்டடவாக்கத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| பிரான்ஸ் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| ஜேர்மனி | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| அயர்லாந்து | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| இத்தாலி | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 நவெம்பர் 28 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**
மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.